தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-2-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மஞ்சள் விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்

மஞ்சள் இருப்பு, தற்போதைய பயிர் நிலவரம், ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுத் தேவை ஆகியன மஞ்சள் விலையை நிர்ணயிக்கும் முக்கியக் காரணிகளாகும். இந்தியாவில் மஞ்சளுக்கான ஓராண்டுத் தேவை 75 இலட்சம் மூட்டைகளாகும். கரீப் பருவப்பயிரான மஞ்சள் ஜுன் - ஜுலையில் பயிரிடப்பட்டு மார்ச் - ஏப்ரலில் அறுவடை செய்யப்படுகிறது. 2013 ஆம் ஆண்டு மஞ்சள் விலை ஏற்ற இறக்கத்துடன் இருந்தது. அறுவடை மாதமான பிப்ரவரி- ஏப்ரல் 2013 இல் ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.6500-7500 வரையும் 2013ஆம் ஆண்டு மத்தியில் ரூ.5800க்கும் விற்று வருட இறுதியில் விலை சற்றே உயர்ந்து காணப்பட்டது.

2013ஆம் ஆண்டில் விலையில் ஒரு புதிய மாறுதல் காணப்பட்டது. அதாவது அதிக வரத்து சமயங்களில் விலை உயர்ந்தும் குறைந்த வரத்து காலத்தில் விலை குறைந்தும் காணப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் ஆந்திர மஞ்சள் தமிழக மஞ்சளின் தரத்திற்கு இணையாகவும், குறைந்த விலையில் கிடைத்ததும் மற்றும் தேசியச் சந்தைகள் ஒருங்கிணைந்து காணப்பட்டதுமேயாகும். 2014 ஆம் ஆண்டு துவக்கத்திலிருந்தே மஞ்சள் விலை ஏறுமுகத்தில் இருந்தது. மேலும் தற்போது நல்ல தரமான மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.6700 வரை விற்கிறது.

இச்சூழலில் தமிழக விவசாயிகள் மஞ்சள் எதிர்வரும் காலத்தில் மஞ்சள் விலையை அறிந்து தங்கள் விற்பனை மற்றும் சேமிப்பு முடிவுகளை எடுக்க ஆவலாக உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விதமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய

வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 25 ஆண்டுகளாக நிலவிய மஞ்சள் விலையை ஆய்வு செய்து வர்த்தகர்களிடமும் ஆய்வு நடத்தியது.

வர்த்தக மூலங்களின் படி இந்திய மஞ்சள் உற்பத்தி 2014இல் 35-40 இலட்சம் மூட்டைகளாக இருக்குமென்று (1 மூட்டை = 75 கிலோ) அறியப்படுகிறது. இதில் ஆந்திரா 20 இலட்சம் மூட்டைகளும், தமிழகம் 7 இலட்சம் மூட்டைகளும் மற்றும் மகாராஷ்டிரா 10 இலட்சம் மூட்டைகளும் பங்களிக்கும். தேசிய அளவில் தோராயமாக 35 இலட்சம் மூட்டை மஞ்சள் கையிருப்பில் இருக்குமென்றும் தெரிய வருகிறது. தற்போது விரலி மற்றும் கிழங்கு இரகங்கள் ஏறக்குறைய ஒரே விலைக்கு விற்பனை ஆகிறது. கிழங்கிற்கான தேவை டெல்லி சந்தையில் அதிகரித்துள்ளது மற்றும் இருப்பு மஞ்சளிலிருந்து குறைந்த கிழங்கு வரத்து ஆகியன இதற்கான காரணங்கள் ஆகும். கர்நாடகா மாநில வரத்துக்கள் முடிவுடைந்துள்ள நிலையில் அம்மாநில உற்பத்தியில் 70 சதவீத மஞ்சள் கேரள வர்த்தகர்களினால் கொள்முதல் செய்யப்பட்டது.

மஞ்சளின் தேவை குளிர்காலம் முடியும் சமயமான பிப்ரவரி மாத இறுதியில் அதிகரிக்கும். பி.எஸ்.ஆர் 8 இரக புதிய மஞ்சள் தமிழ்நாடு சந்தைக்கு வரத்துவங்கியுள்ளது. மற்ற இரகங்கள் மார்ச் மாதத்தில் வரும். மேலும் ஆந்திராவிலிருந்து வரத்து துவங்கி மார்ச் மாதத்திலிருந்து அதிக வரத்து எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய அளவில் அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் எதிர்பார்க்கப்படும் குறைந்த உற்பத்தி, எதிர்வரும் மாதங்களில் எதிர்பார்க்கப்படும் மஞ்சளுக்கான தேவை மற்றும் முக்கிய உற்பத்தி மையங்களில் உள்ள குறைந்த இருப்பு ஆகியன மஞ்சள் விலையை ஏறுமுகத்தில் வைக்கும். எதிர்பார்க்கப்படும் புதிய உற்பத்தி மற்றும் கையிருப்பு மஞ்சள் வரத்து ஆகியன எதிர்வரும் காலத்தில் விலையினைத் தீர்மானிக்கும். இவற்றைக் கருத்தில் கொண்டு செயப்பட்ட ஆய்வு முடிவுகள் மஞ்சள் விலை மார்ச் - மே, 2014 இல் குவிண்டால் ரூ.7500ஐ தாண்டும் என தெரிவிக்கின்றன.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-2431405

மக்கள் தொடர்பு அலுவலர்